# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 145/பேரூ/2025**
**நாள் : 13.05.2025**

திரு. M. சுப்பராயன்,
புஞ்சை தோட்டக்குறிச்சி,
கரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி,
கரூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கரூர் மாவட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி அஞ்சல், அய்யம்பாளையம் கதவு எண்.140 என்ற முகவரியை சேர்ந்த திரு. M. சுப்பராயன் என்பவரது 18.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.04.2025 அன்று பெறப்பட்டு, 145/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கரூர் மாவட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி அஞ்சல், அய்யம்பாளையம் கதவு எண்.140 என்ற முகவரியை சேர்ந்த திரு. M. சுப்பராயன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 18.04.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 140, அய்யம்பாளையம் என்ற முகவரியில் உள்ள வீட்டில் எனது தந்தை கி. மாரப்பகவுண்டர் வாழ்ந்து வந்து 08.01.1986 அன்று காலமாகிவிட்டார். எனது தாயாரும் 20.01.1993 அன்று காலமாகிவிட்டார். எனது குடும்பத்தில் 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் என மொத்தம் நால்வர் உள்ளனர்.

மேற்படி வீட்டிற்கான சொத்துவரி மற்றும் மின் இணைப்பு ஆகியவை எங்களது தந்தை கி. மாரப்பகவுண்டர் என்கிற பெயரிலேயே இருந்து வந்தது. எதிர்மனுதாரர் திரு. M. குப்புசாமி (மனுதாரரின் சகோதரர்) என்பவர் மேற்படி வீட்டில் குடியிருக்கவில்லை. வெளியூரில் வேலை பார்த்து வந்துள்ளார்.

இதற்கிடையில் எனது தந்தையின் வீட்டிற்கு திரு. M. குப்புசாமி என்பவர் 1995 ஆம் ஆண்டில் குடி புகுந்து, குடிநீர் இணைப்பு கோரியும் மற்றும் எனது தந்தை கி. மாரப்பகவுண்டர் பெயரிலிருந்த சொத்துவரியினை M. குப்புசாமி பெயருக்கு மாற்றிட கோரியும் பேரூராட்சியில் மனு செய்தார். புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட 140, அய்யம்பாளையம் தெருவில் உள்ள எனது தந்தையின் வீட்டின் சொத்துவரியானது எனது தந்தை கி. மாரப்பகவுண்டர் என்கிற பெயரிலிருந்து M. குப்புசாமி, M. சுப்பராயன் என்பவர் பெயருக்கு எவ்வித மூல ஆவணமின்றி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்து, மேற்படி சொத்துவரியில் உள்ள பெயர் மாற்றத்தை இரத்து செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுவானது அவர் சமர்ப்பித்த ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புஞ்சை தோட்டக்குறிச்சி இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. M. சுப்பராயன் என்பவர் 18.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண்.140, அய்யம்பாளையம் என்கிற முகவரியிலுள்ள வீட்டிற்கு காலஞ்சென்ற தனது தந்தை கி. மாரப்பகவுண்டர் என்கிற பெயரில் சொத்துவரி செலுத்தி வந்த நிலையில், மனுதாரரது சகோதரர் திரு, M. குப்புசாமி என்பவர் 1995 ஆம் ஆண்டில் மேற்படி வீட்டிற்கு கி. மாரப்பகவுண்டர் பெயரிலுள்ள சொத்துவரியினை மாற்றம் செய்திட கோரியதின் அடிப்படையில், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் 19.10.1995 நாளிட்ட பேரூராட்சி நிர்வாக அலுவலரின் நடவடிக்கை ஆணையில் சொத்து வரியானது K. மாரப்பகவுண்டர் என்பவர் பெயரிலிருந்து M. குப்புசாமி, M. சுப்பராயன் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கு பின்னர் மனுதாரர் தனது 18.04.2025 நாளிட்ட முறையீட்டு மனு மூலமாக மேற்படி சொத்துவரி பெயர் மாற்றத்தை இரத்து செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c)–ன்படி முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்யக்கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-
(a) xxx xxx
(b) xxx xxx
(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நிகழ்வானது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு (அதாவது 30 ஆண்டுகளுக்கு முன்பு) நடைபெற்றுள்ளதால் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c)–ன்படி, மனுதாரரின் புகார் மனுவினை பரிசீலிக்க இயலாது என்பதால் இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M. சுப்பராயன்,
140, அய்யம்பாளையம்,
பு. தோட்டக்குறிச்சி அஞ்சல்
புகழூர் தாலுக்கா,
கரூர் மாவட்டம்–639 113.
2) செயல் அலுவலர்,
அய்யம்பாளையம் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்
3) பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/5/25
செயலாளர்
15/5/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032